<u>செய்தி குறிப்பு எண்.31</u> <u>நாள். 6.7.2009</u>

# மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை.
# முதலமைச்சர் கலைஞரின் கருத்து.

**2009–2010ஆம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஏழையெளிய சாமானிய மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.**

**வேளாண்மை துறைக்கு முன்னுரிமை அளித்து விவசாயிகளுக்கு இந்த ஆண்டு ரூபாய் 3,25,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதும் பயிர்க் கடன்களை முறையாக திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு ஒரு சதவீத வட்டி குறைப்பு அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பதும் விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி மற்றும் தீர்வு திட்டத்தை 31–12–2009 வரை ஆறு மாத காலம் நீட்டித்து இருப்பது குறித்தும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு இந்த வரவு செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டத்தக்கது. நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் மாபெரும் திட்டமான ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கு ரூபாய் 12,887 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது பாராட்டுதலுக்குரியது. மேலும் நகர்ப் பகுதிகளில் 5 ஆண்டுகளில் குடிசைகளே இல்லாத நிலைய உருவாக்கும் ராஜீவ் குடியிருப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது குறித்து பாராட்டுகிறேன்.**

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கு இந்த ஆண்டின் ஒதுக்கீட்டை 144 சதவீதம் உயர்த்தி ரூ. 39,100 கோடியாக ஒதுக்கீடு செய்தது மிகவும் வரவேற்கத் தக்கது. கிராமப் பகுதிகளுக்குத் தேவை யான பிரதம மந்திரியின் கிராம சாலைகள் திட்டத்திற்கு ரூபாய் 12,000 கோடியும், இந்திரா வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூபாய் 8,800 கோடியும் ஒதுக்கீடு செய்திருப்பதும் சிறப்பான அறிவிப்புகளாகும். கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் ஒரு மாபெரும் கைத்தறி தொழில் வளாகம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஏற்கனவே அறிவித்தவாறு இந்த வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் மறு வாழ்வுப் பணி களுக்காக ரூபாய் 500 கோடி இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ததற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தத்தில் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பயன் பெறத் தக்க வகையில் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் முன்னுரிமை வழங்கி, முதன் முறையாக பத்து இலட்சம் கோடி ரூபாய் அளவிலான நிதி ஒதுக்கீடுகள் கொண்ட இந்த வரவு செலவு திட்டத்தை அளித்துள்ள மத்திய நிதி அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.